THE WORLD NEEDS THE WORD
IBT

நவம்பர் 2024
மலர் 23, இதழ் 2


# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

## கர்த்தர் மனிதனிடம் வெறுக்கும் மூன்று தீய குணங்கள்



# கர்த்தர் மனிதனிடம் வெறுக்கும் மூன்று தீய குணங்கள்

*"இப்பொழுதோ கோபமும், மூர்க்கமும், பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும், வம்பு வார்த்தைகளாகிய இவைகளை யெல்லாம் விட்டுவிடுங்கள்" கொ. 3 : 8.*

அப்போஸ்தலனாகிய பவுலால் எழுதப்பட்ட பதிமூன்று புத்தகங்களிலே ஒன்று கொலோசே சபையினருக்கு எழுதப்பட்ட மடலாகும். அப். பவுல் கொலோசெ பட்டணத்திற்குச் சென்றதில்லை. ரோம சிறைச்சாலையில் இருக்கும்போது இந்நூலை எழுதினார்.

மனிதராகிய நம் இருதயத்துக்குள் எல்லாவிதமான தீயகுணங்களும் ஒட்டு மொத்தமாக உள்ளன. எல்லாப் பாவ எண்ணங்களும் நம்மிடையே உள்ளன. *"தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதி 6 : 6).* கர்த்தர் மனஸ்தாபப்படுவதற்கும், விசனப்படுவதற்கும் ஏற்றவாறு மனிதனின் உள்ளமானது மிகவும் கேடுள்ளதாயிருக்கிறது.

கர்த்தரிடமிருந்து எத்தனையோ வாக்குத் தத்தங்கள், ஆசீர்வாதங்கள், அற்புதங்களை மட்டும் பெற்றுக் கொள்ள வாஞ்சிக்கிறோம். ஆனால், கர்த்தருக்குப் பிரியமில்லாத தீய காரியங்களை விட்டுவிட நாம் எண்ணுவதோ, நினைப்பதோ இல்லை.

கடைக்குச் சென்றால் நல்ல காய்கள், பழங்கள்தானா என்று பார்த்து வாங்குவோம். கெட்டுப் போனவைகளையோ அல்லது பூச்சி உள்ளவைகளையோ நாம் ஒதுக்கி விடுவோம். அதை வாங்கி உட்கொண்டால் நம் உடம்பும் கெட்டுப் போய்விடும் என்று நாம் நல்ல பொருட்களையே வாங்குவோம். அதேபோல்தான் நம்முடைய ஆத்துமாவும், எத்தனையோ வகையான தீய எண்ணங்கள் நம் உள்ளத்தின் ஆழத்திலிருந்து விதைபோட்டு, வேரூன்றி அடுத்தவர்களுக்கு விரோதமாக செயல்படுவதில் மூர்க்கத்தனமாக தலைவிரித்தாடுகிறது.

காயீன் தன் சகோதரனுக்கு விரோதமாக எழும்பினான். காயீன் இந்த பூமியிலே சபிக்கப்பட்டவனானான் (ஆதி. 4 : 8,11).

ராகேல் (3-வது முற்பிதாவின் மனைவி) தன் தகப்பனாகிய லாபானுக்குத் தெரியாமல், தன் கணவனான யாக்கோபுக்கும் தெரியாமல் விக்கிரங்களைத் *திருடிக்கொண்டு* வந்தாள். பெத்லகேமுக்குள் (அப்பத்தின் வீடு) நுழைய முடியாமல் மரித்துப் போனாள்.

எலிசாவின் வேலைக்காரனான கேயாசி எலிசாவுக்குத் தெரியாமல் நாகமானிடம் உடைமைகளையும், பொருட்களையும் வாங்கி, வீட்டில் ஒளித்து வைத்துவிட்டு, தீர்க்கனிடம் *பொய்* பேசியதின் விளைவு சாகும் வரைக்கும் கேயாசியின் மேல் குஷ்டரோகம் தாக்கியது.

அனனியா, சப்பிராள் தங்கள் காணியாட்சிகளை விற்று ஒரு பகுதியை வீட்டிலே திருட்டுத்தனமாக வைத்துவிட்டு, மீதியைக் கொண்டு வந்து பேதுருவிடம் வைத்தனர். பேதுரு கோபம் கொண்டு பரிசுத்தாவியானவரிடத்தில் *பொய்* சொன்னாய் என்று கூறியபோது, ஒருவர் பின் ஒருவராக மரித்தார்கள்.

இப்படி அநேக தீயகுணங்களால் மனிதர்கள்மேல் நோய்களையும், மரணத்தையும் வருவித்துக் கொண்டனர் என்று பார்க்கிறோம். கர்த்தர் விரும்பும் வழியில் நடக்க நாம் தெரிந்து கொள்வோம். கர்த்தர் வெறுக்கும் மூன்று தீயகுணங்கள்.

1. கீழ்ப்படியாமை (Disobedience)
2. சுயநலம் (Selfishness)
3. மேட்டிமை (Pride)

## *1. கீழ்ப்படியாமை* (Disobedience)

*''... தூபம் காட்டுகிறது... ஆசாரியருக்கே அடுக்கும்; ...இது தேவனாகிய கர்த்தராலே உமக்கு மேன்மையாக லபியாது என்றார்கள். (2 நாளா. 26 : 18).*

ஒரு மனுஷனுடைய உள்ளமானது எந்த சூழ்நிலையில் மாறும் என்பதை உசியா ராஜாவினுடைய வாழ்க்கையில் காணலாம். தேவனுக்குள் இருப்பவர்களோடு நெருங்கிய ஐக்கியம் / உறவு கொள்வதும் அவர்களின் ஆலோசனைப்படி கேட்டு நடப்பதும் எவ்வளவு அவசியமானது என்ற பாடத்தை உசியா ராஜாவின் வாழ்க்கை நமக்கு எடுத்துரைக்கிறது.

வேதாகமத்தின் முதல் சட்டமே கீழ்ப்படிதல் தான். கீழ்ப்படிதல் இல்லாவிட்டால் எப்பேர்ப்பட்ட பணக்காரனாக, வசதி உள்ளவனாக இருந்தாலும் நம்முடைய வாழ்நாள் செழிப்பாகவோ, சந்தோஷமாகவோ நிச்சயமாக இருக்கவே முடியாது.

உசியா ராஜாவுக்கு அசரியா என்று வேறு ஒரு பெயரும் உண்டு. உசியா என்றால் யேகோவா பாதுகாக்கிறார் என்று அர்த்தம்.

தன் தகப்பனாகிய அமத்சியா (தாய் எக்கோலியாள்) மரணமடைந்தபோது, உசியாவுக்கு நான்கு வயது. ஆகவே மற்றவர்கள் தான் அரசப் பொறுப்பை கவனித்துக் கொண்டனர். தனது பதினாறாவது வயதில் அசரியா அரச பொறுப்பை ஏற்றார் (2 இராஜா 15 : 1, 2). ஐம்பத்திரண்டு வருஷம் எருசலேமிலே அரசாண்டார்.

வெற்றியும், செல்வச் செழிப்பும், செல்வாக்கும், புகழும் ஒரு மனிதனை எளிதில் நிலை தடுமாறச் செய்துவிடும். அதேபோல்தான், உசியா ராஜாவும் *“...கர்த்தரைத் தேடின நாட்களில் தேவன் அவன் காரியங்களை வாய்க்கச் செய்தார்” (2 நாளா. 26 : 5).*

பெலிஸ்தியரோடு யுத்தம் பண்ணி வெற்றி வாகை சூடவும், அம்மோனியர்கள் உசியாவுக்கு காணிக்கை கொடுத்தார்கள். எகிப்தின் எல்லை மட்டும் உசியாவின் கீர்த்தி பரம்பிற்று. வசதி வாய்ப்புகள் பெருகினபடியால் தன்னுடைய தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்தான்.

### *உசியா செய்த மீறுதலும், கிடைத்த தண்டனையும் :*

தூப பீடத்தின்மேல் தூபங்காட்ட கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசித்தான். தலைமை ஆசாரியனான அசரியாவும், பராக்கிரம சாலிகளாகிய எண்பது ஆசாரியர்களும் ஆலயத்தின் உள்ளே உசியாவின் பின்னால் பிரவேசித்தார்கள். ஆரோன் குமாரராகிய ஆசாரியர்களுக்கே உரிய ஆலயத்தில் தூபம் காட்டும் வேலையை ராஜாவாகிய நீர் செய்யக்கூடாது என்று எவ்வளவோ தடுத்தும் உசியா கேட்கவில்லை.

தன்னைத் தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தி கீழ்ப்படிய வேண்டிய சூழ்நிலையில், ஆலயப் பணியாளர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும், அவர்கள் கூறும் சொல்லுக்கும் கீழ்ப்படிய அவருக்கு மனதில்லை. நான்கு பக்கத்திலிருந்தும் உசியா மீது புகழ்ச்சிப் பாடல் பாடப்பட்டதால் தனக்குத் தேவையில்லாத காரியத்தில் எல்லாம் தலையிட, தன்னை எதிர்த்து யாரும் நிற்க மாட்டார்கள், பெரியவர் சொல்லுக்கெல்லாம் கீழ்ப்படிய வேண்டிய அவசியம் இல்லை, நானே எல்லாம் என்ற எண்ணம் வந்தது.

மற்றவர்களின் பொறுப்புகள், பதவிகள், ஊழியங்கள் இவற்றில் நாம் தலையிடவும் கூடாது. பறிக்கவும் கூடாது. தூப கலசத்தை கையில் எடுத்து ஆசாரியர்களோடு கோபமாய் வேகமாய் பேசின போது, உசியாவின் உடம்பில் ஒரு மாற்றம் ஏற்பட்டது.

*<u>உசியாவிடம் கடந்து வந்த மாற்றம் என்ன?</u>*

*"...தூப பீடத்தின் முன்நிற்கிற உசியாவின் நெற்றியிலே குஷ்டரோகம் தோன்றிற்று" (2 நாளா. 26 : 19).*

வியாதியிலே மிகக்கொடுமையான நோய் தோல் நோய். உடம்பிலே வரும் மற்ற நோய்களுக்கெல்லாம் மருந்து மாத்திரைகளைச் சாப்பிட்டு வெளியே தெரியாமல் வாழ்ந்து கொள்ளலாம். ஆனால், தோல் நோய் அப்படியல்ல. யாராலும் எதைப் போட்டு மூடியும் மறைக்கவும் முடியாது. ஆகவேதான் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியர்கள் ஒரு சட்டம் வைத்திருந்தார்கள்.

*<u>ஆசாரியர்கள் வகுத்த சட்டம் :</u>*

தோல் நோய் (குஷ்டரோகம்) வந்தவர்கள் சமுதாய மக்களோடு உறவு கொண்டாட முடியாது. வீட்டிலே மற்ற மக்களோடு கலந்து வாழமுடியாது. ஊருக்கு வெளியே ஆள் நடமாட்டம் இல்லாத இடத்திற்குச் சென்று வாழவேண்டும். அந்த நோயானது முற்றிலும் குணமாயிற்றா என்று பார்த்துச் சொல்ல வேண்டிய பொறுப்பு ஆசாரியனுக்கு உரியது. ஆசாரியனிடமிருந்து ஒரு நற்சான்றிதழ் பெற்றபின் தான் ஊருக்குள் வந்து சமுதாய மக்களோடு ஒன்றுசேர்ந்து வாழ முடியும்.

ஆகவேதான் லூக். 17 : 12 - 19 - இல் இயேசுவானவர், சமாரியா, கலிலேயா நாடுகளின் வழியாக ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது, பத்து குஷ்டரோகிகள் தூரத்திலே நின்று இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்கும் என்று சத்தமிட்டார்கள். ஆண்டவர் அவர்களுக்கு என்ன பதில் கூறினார்? நீங்கள் போய் ஆசாரியர்களுக்கு உங்களைக் காண்பியுங்கள் என்று சொல்லி கடந்து போய் விடுகிறார்.

இவ்வளவு பெரிய பொறுப்புக்கு அதிகாரியான ஆசாரியனான அசரியாவின் சொல்லுக்கு உசியா கீழ்ப்படியவே இல்லை. செல்வச் செறுக்கு மற்றும் தன் நாட்டின் கீர்த்தியின் பெருமை உசியா ராஜாவின் கண்களை மறைத்தது. ஒரு ராஜா தன்னுடைய தேசத்து குடிமக்களை எந்த ஒரு குறைபாடும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுவது மிக அவசியம். தான், ஒரு கீர்த்தி பெற்ற ராஜாவாக இருந்தால் தான், செய்யக்கூடாத காரியங்களில் தலையிடுவது அறிவீனம். பராக்கிரமசாலிகளான எண்பது ஆசாரியர்களின் சொல்லைக் கேட்காமல், தூபகலசத்தைக் கையில் பிடித்த அந்நேரமே உசியாவின் நெற்றியில் குஷ்டரோகம் தோன்றிற்று. ஆலயத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.

உசியா தொடர்ந்து ராஜாவாக சிம்மாசனத்தில் அமர முடியாத படியால் தன் மகன் யோதாமை பொறுப்பில் அமர்த்தினார். *"...தன் மரண நாள் மட்டும் குஷ்டரோகியாயிருந்து தனித்து ஒரு வீட்டில் வாசம் பண்ணினான்..." (2 இராஜா. 15 : 5).*

கீழ்ப்படிதல் தேவனுக்குப் பிரியமான குணம். கீழ்ப்படியாமை தேவன் வெறுக்கும் குணம். பெரியவர்கள் சொல்லுக்குக் கீழ்ப்படிவோம். தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாக மாறுவோம்.

## <u>*2. சுயநலம்* (Selfishness)</u>

*"ஐசுவரியவானுடைய மேஜையிலிருந்து விழுந்துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்..." (லூக். 16 : 21).*

பரிசுத்த லூக்கா, தான் எழுதிய இந்த சுவிசேஷ மடலிலே இயேசுவானவர் ஒரு உண்மை நிகழ்ச்சியைக் குறித்து பேசுகிறார். இது ஒரு உவமை அல்ல. பாதாளம், பரதீசு (மோட்சம்) என்ற வார்த்தைகள் குறித்த பல குறிப்புகள் காணப்படுவதைப் பார்த்தால் நிச்சயமாக இந்தப் பகுதி (லூக். 16 : 19-31) ஒரு உண்மைச் சம்பவமாகக் கருத வேண்டும்.

நம் தேவன் இந்த அகிலத்திலுள்ள யாவரையும் தம்முடைய சாயலாகப் படைத்தார். மனிதனைப் படைத்து அதற்காக வருத்தப்பட்டார் என்று வாசிக்கிறோம். இந்த சுவிசேஷப் பகுதியிலும் இரண்டு மனிதர்களைக் குறித்து சொல்லுகிறார். அந்த இரண்டு பேரில் ஒருவன் ஐசுவரியவான். மற்றவன் ஒரு ஏழை. இரண்டு பேரையும் கர்த்தர் தான் படைத்தார்.

ஆனால், இரண்டு பேர்களின் வாழ்க்கையிலும் அநேக வித்தியாசங்கள் காணப்படுகின்றன. *ஐசுவரியவான்,* ஏழை *லாசரு* வாழ்க்கையிலே அநேக வேறுபாடுகள் காணப்படுகின்றன. சாப்பிடுவதில், உடுத்தும் உடை, வாழும் இடம், சாப்பிடும் சாப்பாட்டில் ஏற்றத் தாழ்வு என்று பல குறைபாடுகளை லாசரு சந்திக்கிறான். காரணம், எந்த ஒரு வசதி வாய்ப்பும் இல்லாத *தரித்திரன்.* ஆனால் பணக்காரனுக்கோ எவ்வித கஷ்டமும் இல்லாத *சுகபோகமான நிறைவான* வாழ்க்கை.

இரண்டு பேரும் மரித்தனர். பணக்காரன் பாதாளத்திற்குச் சென்றான். லாசரு ஆபிரகாமின் மடியிலே அமர்ந்தான். பாதாளத்திலிருந்த பணக்காரன் ஆபிரகாமையும் அவன் மடியில் இருந்த லாசருவையும் பார்க்கிறான். அக்கினியில் அதிக வேதனைப்பட்ட பணக்காரனுக்கு தாகம் ஏற்பட்டபடியால் ஆபிரகாமைப் பார்த்து கூப்பிட்டான்.

### *ஆபிரகாமும், பணக்காரனும் என்ன பேசினார்கள்:*

தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவை குளிரப் பண்ண வேண்டும் என்று பணக்காரன் கூறினான்.

ஆபிரகாமின் பதில் : நீ பூமியிலே வாழ்ந்த காலத்தில் எல்லா நன்மைகளோடு வாழ்ந்தாய். அதேசமயம் லாசரு எல்லா கஷ்டங்களையும், தீமையையும் அனுபவித்தான். இப்போது லாசரு தேற்றப்படுகிறான். நீயோ வேதனைப்படுகிறாய் என்றார் ஆபிரகாம்.

தேவன் காயீனைப் பார்த்து ஒரு வார்த்தை கூறினார். *''பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும்'' (ஆதி. 4 : 7).* ஆபேலுக்கு எதுவும் நடந்துவிடக் கூடாது என்று எண்ணி தேவன் காயீனிடம் பேசினார். தேவனுடைய வார்த்தைக்கு காயீன் செவி சாய்க்கவில்லை. அதற்குரிய தண்டனையை காயீன் பெற்றான்.

### *பணக்காரன் செய்யத் தவறியது என்ன?*

வசதிபடைத்த இந்த மனிதன், எந்த ஒரு தேவைக்கும் வெளியே செல்லத் தேவையில்லை. எல்லா வேலைக்கும், தன்னுடைய தேவைகளை நிறைவேற்ற வேலைக்காரர்கள் நிறைய பேர் இருந்தனர். மேலும் தன் வாசலில் பசியோடும் உடல் சுகவீனத்தோடும் படுத்திருந்த *ஏழை லாசருவை கண்டு கொள்ளவில்லை.* தான் மட்டும் விலையேறப்பட்ட வஸ்திரமும், சம்பிரமமான வாழ்க்கையும் வாழ்ந்தான். அவனுடைய ஐந்து சகோதரர்களும் இதே மாதிரியான சுகபோகமான வாழ்வை வாழ்ந்து கொண்டிருந்தனர். அடுத்தவர்களைக் குறித்த கவலையோ / நினைப்போ பணக்காரனிடம் காணப்படவில்லை.

மேலும், அவனுடைய சுயநலத்தில் தன்னுடன் பிறந்த சகோதரர்கள் மட்டும் இப்படியான கஷ்டத்தையோ / நரக வேதனையையோ அனுபவிக்கக் கூடாது என்று விரும்புகிறான். ஆனால் மோசேயும், தீர்க்கதரிசிகளும் சொல்லும் காரியத்தைக் குறித்து தானும் தன்னுடைய சகோதரர்களும் நடந்தால் இப்படியான கஷ்டத்தை அனுபவிக்கத் தேவையில்லை. ஆனால்,

சுயநலமாக வாழும் சகோதரர்கள் திருந்தி வாழ மரித்தோரிலிருந்து ஒருவன் போய் பாதாளம் எப்படியிருக்கும், அதின் கஷ்டங்கள் குறித்து தன்னுடைய சகோதரர்களுக்குச் சொல்லும்படி யாரையாவது அனுப்பும்படி ஆபிரகாமிடம் கூறுகிறான். ஆபிரகாமின் பதில் : மோசேக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் செவி கொடாதவர்கள், பரலோகத்திலிருந்து ஒருவன் போய் பேசினாலும் மனந்திரும்பமாட்டார்கள் என்று கூறிவிடுகிறார்.

யோவான் மற்றும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் முதல் பிரசங்கம் மனந்திரும்புங்கள் என்பதே. மனந்திரும்ப வேண்டுமென்ற எண்ணம் வருமேயானால், சுயநலம் என்ற தீய குணம் நம்மை விட்டு அகன்று விடும். சுயநலம் நம் உள்ளத்திலே வருமேயானால், உள்ளமும் கெட்டுப் போகும்; சுயமாக சிந்திக்கும் செயல் நின்று போய்விடும். விட்டுக் கொடுக்கும் குணம் (Flexibility) நம்மை விட்டு அகன்று போய்விடும். நம் மனநலம் மாறாமல் இருக்க வேண்டுமானால் சுயநலத்தை விட்டு ஒழிப்போம்.

### *3. மேட்டிமை* (Pride)

*''கர்த்தர் பட்டயத்தாலும், ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல... யுத்தம் கர்த்தருடையது...'' (1 சாமு. 17 : 47).*

உலக வரலாற்றிலே மிகவும் முக்கியமான போர் இஸ்ரவேல் ஜனங்களுக்கும், பெலிஸ்தியருக்கும் நடந்தது. எந்த இடத்தில், எந்த இஸ்ரவேல் ராஜாவினுடைய காலத்தில் நடந்தது என்று பெயர் குறித்து எழுதப்பட்டிருப்பதால் இது கற்பனைக் கதை கிடையாது என்று நாம் நம் உள்ளத்தில் உறுதி கொள்ளலாம்.

### *யார் இந்த கோலியாத்?*

காத் ஊரைச் சேர்ந்தவன். பெலிஸ்தியன். உடன் பிறந்தவர்கள் 4 பேர் (2 சாமு 21 : 16-22). இவனுடைய நோக்கமெல்லாம் கர்த்தருடைய ஜனங்களான இஸ்ரவேல் மக்களை முற்றிலுமாக அழிக்க வேண்டும் என்பதே. அவனுடைய தோற்றம்: தலையிலே வெண்கலச்சீரா மற்றும் போர்க் கவசம், காலிலே வெண்கல கவசம், தோளிலே வெண்கலக் கேடகம் அணிந்திருப்பான். பத்தடி உயரமானவன்.

### *யார் இந்த தாவீது?*

பெத்லகேம் ஊரானாகிய ஈசாயின் எட்டாவது மகன். ஆடு மேய்க்கும் தொழில், சிறந்த பாடகர், வாத்தியக் கருவிகளை மீட்டுவதில் வல்லவர். இஸ்ரவேல் மக்களிடையே நாற்பது வருடம் ராஜாவாக இருந்தவர். ஆண்டவரோடு பேசுவதற்கு நேரத்தை ஒதுக்கியவர்; யுத்த வீரன்.

### *யார் இந்த சவுல்?*

இஸ்ரவேல் தேசத்தில் தேவனால் தெரிவு செய்யப்பட்ட முதல் ராஜா. நாற்பது வருடம் மக்களை நியாயம் விசாரித்தான். இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் சவுலின் தோளுக்கு கீழ் இருந்தார்கள். அவ்வளவு உயரமானவன்.

### *இஸ்ரவேல் + சவுலுக்கும் பெலிஸ்தியனான கோலியாத்துக்கும் போர்:*

இஸ்ரவேல் மக்கள் ஒரு மலையின் மீதும், பெலிஸ்தியப் படைகள் ஒரு மலையின் மீதும் நாற்பது நாட்களாக (40 Days) அணிவகுத்து நின்றனர். ஆனால் போர் தொடங்கவில்லை. அதற்குக் காரணம் இரண்டு படைகளுக்கும் நடுவே ஒரு பெரிய பள்ளத்தாக்கு இருந்தது.

கோலியாத்தின் எண்ணமெல்லாம், ஈட்டி, வாள், கேடகம் வைத்து பெலிஸ்தியர்கள் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஆகவே, ஒருவராலும் தங்களை அசைக்க முடியாது என்று நினைத்தான். ஆனால், குருவியை நோக்கி எறியும் கவணைக் கொண்டு தாக்கி தன்னை போரில் தோற்கடிக்கச் செய்யும் இளைஞன் ஒருவன் உண்டு என்பதை கோலியாத் நினைக்கவே இல்லை.

மேட்டிமையானவனையோ கர்த்தர் தூரத்திலிருந்து அறிகிறார். *பெருமை* பாராட்டுகிறவனுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார்.

## *யுத்தம் யாருக்கு?*

ஒரு அரக்கனுக்கும், மனிதனுக்கும் இடையே அல்ல. கர்த்தரை நிந்திப்பவனுக்கும், கர்த்தருக்கும் இடையிலேயே போர் என்பதை தாவீது நன்கு உணர்ந்தார். சிங்கத்தையும், கரடியையும் தாவீது, தான் கொன்றதாக சவுலிடம் கூறியதன் நோக்கம் சவுலுக்கு விசுவாசம் வருவதற்காகவே. இஸ்ரவேலர் யாவரிலும் கம்பீரமான தோற்றம் கொண்ட சவுல் ராஜா, கோலியாத்துடன் போரிடச் செல்லாமல், சிறுவனான தாவீதை அனுப்பி வைத்ததை நினைத்துப் பாருங்கள். தாவீதோடு சேர்ந்து கர்த்தரும் போரிட்டார். *ஒரு சில நிமிடங்கள் மட்டுமே* சண்டை நடந்தது.

பெலிஸ்தியன் மிகுந்த மேட்டிமையோடு தாவீதுக்கு நேராக நெருங்கி வந்த போது, சிறுவனான தாவீது, விசுவாசம் என்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டு கல்லை எடுத்து கவணிலே வைத்து *சுழற்றி* பெலிஸ்தியனுடைய நெற்றியிலே பட எறிந்தான். அந்தக் கல் பெலிஸ்தியனின் *தலைச் சீராவை உடைத்துக் கொண்டு, நெற்றியில் பட்டு, மண்டையோட்டை உடைத்து, தலைக்குள் சென்று கோலியாத்தை முகங்குப்புற விழச்செய்தது கர்த்தருடைய செயல்.* கோலியாத்தின் தலையை கோலியாத்தின் வாளாலே வெட்டினார் தாவீது. பெலிஸ்தியர் பயந்து ஓடினர். இஸ்ரவேலர் வெற்றி பெற்றனர். இஸ்ரவேலில் தேவன் உண்டு என்பதை அறிவார்கள் என்று தாவீது உரைத்தது இன்னும் தொடர்ந்து நிறைவேறிக் கொண்டேயிருக்கிறது.

*உசியா ராஜா* மீது கர்த்தருக்கு கோபம் வந்ததின் காரணம், தான் செய்வது தவறு என்று நன்கு தெரிந்திருந்தும் ஆலயத்தின் ஆசாரியர்கள் பணியை, தான் கையில் எடுத்தது மன்னிக்க முடியாத குற்றம். தவறு என்பது தவறிச் செய்வது. அதற்கு மன்னிப்பு உண்டு. தப்பு என்பது தெரிந்து செய்வது. அதற்கு மன்னிப்பு கிடையாது. எந்த ஒரு காரியத்தைச் செய்யும்முன் கர்த்தருக்கு பிரியமானதா என்று யோசித்து செயல்படுவோமாக.

பணக்காரனிடமிருந்த *சுயநலம்* நம்மிடையே இருக்குமேயானால், அதை வெளியே தூக்கி எறிவோம். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். இரண்டு அங்கி உள்ளவன் ஒன்றை வைத்துக் கொண்டு, மற்றொன்றை இல்லாதவனுக்கு கொடுக்கும்படி கிறிஸ்து கூறினார்; கூறுகிறார். யோசேப்பு சிறைச்சாலையில் இருந்த பானபாத்திரக்காரனிடம் என்ன சொன்னார்?

*"...நீ வாழ்வடைந்திருக்கும்போது, என்னை நினைத்து, என் மேல் தயை வைத்து... என்னை விடுதலையாக்க வேண்டும்" (ஆதி. 40 :14).* தன்னுடைய காரியம் முடிந்து விட்டது என்று மகிழ்ந்து போய்விட்டான். யோசேப்பை நினைக்கவே இல்லை. ஆனால் சுயநலம் இல்லாத பிறர் நலத்திற்காகவே வாழ்ந்த யோசேப்பை தேவன் பலமடங்கு உயர்த்தினார்.

மேட்டிமை என்ற தீய குணம் ஒரு மனிதனுக்குள் வந்துவிட்டால் அவனுடைய கால் தரையில் நில்லாமல் பலவாறாக செயல்படும். எல்லா கெட்ட பழக்கங்களும் குடியேறி விடும். ஒரு சிறுவன் (தாவீது) பலசாலியான தன்முன் ஒரு கோலோடு வந்து நின்று, தேவனை சாட்சியாக வைத்துப் பேசியதை ஒரு துச்சமாக எண்ணினான் கோலியாத். மேட்டிமையானது, அவனது அறிவை மழுங்கச் செய்து கண்ணை மறைத்தது. தாவீது சொல்வது போல் நமக்குள் மனப்போராட்டமா? நமக்கு எதிரிகள் தோன்றுகிறார்களா? பயப்பட வேண்டாம். யுத்தம் கர்த்தருடையது. காரணம், தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. நிச்சயமாக வெற்றி தருவார்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

*– சகோதரி. பேர்ல் குயிலிராஜா*

# ஆசிரியர் மடல்

கர்த்தருக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற திருநாமத்தினாலே எங்கள் அன்பின் வாழ்த்துக்களை சத்திய வார்த்தையின் சார்பாக தெரிவித்துக் கொள்கிறோம்.

*"...நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5 : 9).*

இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட யாவரும் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்கிறோம். நீதிமான்களாக்கப்பட்ட நாம் இந்த உலகின் பாவத்தினால் ஏற்படுகிற தேவ கோபாக்கினைக்கும் எல்லாப் பொல்லாப்புக்கும் நீங்கலாகி, கடைசி நாட்களில் வருகின்ற உபத்திரவ நாட்களுக்கு முன்பாக தேவனுடைய ரகசிய வருகையில் சபை எடுத்துக் கொள்ளப்படும் என்று வேதம் சொல்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்தை விட்டு புறப்படுவதற்கு முன்பாக, எகிப்து தேசம் எங்குமுள்ள மனிதர் முதல் மிருக ஜீவன் வரை உள்ள தலைப்பிள்ளைகளை சங்காரம் பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார். அந்த அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ள இஸ்ரவேல் ஜனங்களின் வீடுகளில் உள்ள வாசற்படியின் நிலைக்கால்களிலும், மேற்சட்டத்திலும் பஸ்காவிற்கு பலியிடுகிற ஆட்டின் இரத்தத்தை தெளிக்க வேண்டும் என்றும், அப்பொழுது சங்காரக்காரன் அதைக்கண்டு விலகிப் போவான் என்றார். அது சிலுவையின் இரத்தத்திற்கு அடையாளமாக உள்ளது. இஸ்ரவேல் ஜனங்கள் அந்த சங்காரத்திற்கு ஆட்டின் இரத்தத்தாலே தப்புவிக்கப்பட்டது போல, நாமும் கிறிஸ்துவின் இரத்தத்தாலே தப்புவிக்கப்படுவோம்.

யோசுவா இரண்டு வேவுக்காரரை எரிகோவிற்கு வேவு பார்க்க அனுப்பினான். அவர்கள் ராகாப் என்னும் வேசியின் வீட்டில் ஒளிந்து கொண்டார்கள். எரிகோவின் ராஜாவிற்கு அது தெரியவந்தபோது, அவர்களை அழிக்க எரிகோவின் ராஜா ஆட்களை அனுப்பினான். அந்த ஆட்கள் வேவு காரரைத் தேடி, ராகாப் வேசியின் வீட்டிற்கு வந்தபோது, அவள் வேவுகாரரை அவர்களின் கையில் ஒப்புக்கொடாமல் தப்புவித்தாள். அதினிமித்தம் அந்த மனுஷர்கள் ராகாபிடம் "நாங்கள் இந்த எரிகோவிற்கு விரோதமாக வரும்பொழுது நீ உன் வீட்டார் அனைவரையும் இந்த வீட்டிற்குள் சேர்த்துக்கொள். சிவப்பு நூல் கயிற்றை இந்த ஜன்னலில் எங்களுக்கு அடையாளமாக கட்டிக்கொள். அதினிமித்தம் நீயும் உன் வீட்டாரும் அழியாமல் காக்கப்படுவீர்கள்" என்றார்கள். அதேப்போல் இஸ்ரவேல் ஜனங்கள் எரிகோவிற்கு விரோதமாக வந்தபொழுது, அந்த சிவப்பு நூல் கயிற்றைக் கண்டு, ராகாப் வேசியின் குடும்பத்தை அழிக்காமல் தப்புவித்தனர்.

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்தர யாத்திரையில் தொடர்ந்து கர்த்தருக்கு விரோதமாகவும், மோசேக்கு விரோதமாகவும் முறுமுறுத்துக் கொண்டிருந்தார்கள். அதினிமித்தம் கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார். அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் அநேக ஜனங்கள் செத்தார்கள். அப்பொழுது ஜனங்கள் மோசேயிடம் போய் கர்த்தருக்கு விரோதமாகவும், உமக்கு விரோதமாகவும் பாவம் செய்தோம்; சாபங்கள் எங்களை விட்டு நீங்கும்படி கர்த்தரிடம் விண்ணப்பம் செய்ய வேண்டும் என்றார்கள். கர்த்தர் மோசேயிடம், "ஒரு வெண்கல சர்ப்பத்தை செய்து ஒரு கம்பத்தின் மேல் தூக்கிவை. கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான்" என்றார். அதேப்போல பாவம் என்னும் சர்ப்பத்தால் கடிக்கப்பட்ட நாமும் சிலுவையில் நமக்காய் தொங்கின இயேசுவைப் பார்க்கும் பொழுது இரட்சிக்கப்படுவோம்.

*''சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது'' (1 கொரி. 1:18).*

ஆந்திரப் பிரதேசம் விசாகப்பட்டிணத்திலுள்ள Union Chappal Church-இல் இவ்வருடமும் செப்டம்பர் மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை 8-ஆம் தேதியன்று, IBT ஞாயிறாக ஆசரிக்கப்பட்டு அந்நாளின் காணிக்கையை IBT முன்னேற்றப் பணியாளர் சகோ. மனோனிட்டா சிங் மூலமாக அனுப்பினார்கள்.

இதே மாதம் 15.09.2024 அன்று அவினாசியிலுள்ள CSI சபையில் காலை ஆராதனையில் சகோ. ராஜகுமார் அவர்கள் தேவ செய்தியும், சகோ. ராபர்ட் அவர்கள் IBT ஊழிய விளக்கமும் அளித்தனர். சந்தர்ப்பம் அளித்த இரு சபைகளின் ஆயர்கள், சபையின் மூப்பர்கள் மற்றும் பங்குபெற்ற சபை மக்கள் அனைவருக்கும் IBT மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறது. இதே மாதம் 28-ஆம் தேதியன்று கோவை IBT மையத்தில் IBT-இன் பொதுக்குழுக் கூட்டமும், WPT-இன் உறுப்பினர் கூட்டமும் நடைபெற்றன. பொதுக்கூட்டத்தில் IBT-இன் தலைவர், செயலர், பொருளர், பணித்தள இயக்குநர் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டு, கடந்த ஆண்டு வரவு செலவு கணக்குகள் மற்றும் நடப்பு ஆண்டில் நடைபெறவுள்ள காரியங்கள் குறித்தும் கலந்துரையாடினார்கள். அடுத்த ஆண்டிற்கான காலண்டர்கள் இம்மாதம் IBT தாங்குநர்களுக்கு பிரதிநிதிகள், முன்னேற்றப் பணியாளர்கள் மூலமாகவும், தபால் மூலமாகவும் வழக்கம்போல் அனுப்பப்படும். IBT ஊழியப் பணிகளுக்கும், வளர்ச்சிக்கும் உங்கள் ஒவ்வொருவரின் ஜெபம் மிக முக்கியமானதாகும். அனுதினமும் மறவாமல் IBT ஊழியத்தின் மொழிபெயர்ப்புப் பணி, மிஷனெரிப் பணி, இலக்கியப் பணி மற்றும் சமூகப் பணிகளுக்காக ஜெபியுங்கள். ஊழியங்களுக்காக ஜெபிக்கிற, தாங்குகிற ஒவ்வொரு குடும்பத்தையும் கர்த்தர் கனப்படுத்தி, தேவைகள் அனைத்தையும் சந்தித்து, எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காத்து நன்மையினால் முடிசூட்டி ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

"ஷாலோம்!"

கர்த்தரின் பணியில்
*உங்கள் சகோதரன்*
***K. ஜெய்சிங்***

# நன்றி கூறுகிறோம்

கடந்த IBT-இன் லோகோஸ் முகாமில் 10 மொழிகளில் வெளியிடப்பட்ட சிறுவர் வேதாகமம் மிகவும் ஆசீர்வாதமான முறையில் அமைந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். IBT-இன் பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு சம்மதம் தெரிவித்து, மனமுவந்து அச்சிடுவதற்கு பேருதவி புரிந்த திருநெல்வேலியில் இருக்கும் திரு. சாத்ராக் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவரை அணுகி, இதற்கு முழு முயற்சி எடுத்து, IMS மிஷனெரிகள், திரு. ஐசக், திருமதி. கிரிஜா ஐசக் இவர்களின் மூலமாக மொழி பெயர்ப்பாளர்களுக்கு பயிற்சி மற்றும் சரிபார்ப்புப் பணிகளை மேற்கொண்டு, இவைகளை லோகோஸ் முகாமில் வெளியிட உறுதுணையாக இருந்த திரு. சாமுவேல் ஞானதாஸ் (Field Director) அவர்களுக்கும் எங்களது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள்

# பணித்தளச் செய்திகள்

*மொழிபெயர்ப்பாளர் : சகோ. சாமுவேல்*
*மொழி : இருளா (வெள்ளியங்காடு)*
*பணித்தளம் : வட்டலக்கி (கேரளா)*

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கடந்த மாதம் லோகோஸ் முகாமில் வெளியிடப்பட்ட இருளா-வெள்ளியங்காடு மொழியிலுள்ள சங்கீதம், நீதிமொழிகள் புத்தகங்கள் விநியோகம் செய்யப்பட்டது.

இதற்காக கோப்பனாரி, ஆலங்கண்டி, ஆலங்கண்டி புதூர், காலணிபுதூர் ஆகிய கிராமங்களுக்குச் சென்று பல மக்களைச் சந்தித்து, 144 புத்தகங்கள் IBT அலுவலகத்திலிருந்தும், திருப்பூரிலிருந்தும் வந்த பிரதிநிதிகள், முன்னேற்றப் பணியாளர்களுடன் இணைந்து விநியோகம் செய்தோம். அதன்பிறகு தனியாகவும் 56 புத்தகங்கள் இருளா மக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. வாங்கிய மக்கள் அனுதினமும் வாசித்து பயன்பெற ஊக்கப் படுத்தியுள்ளோம். சிலருக்கு வாசிப்பதற்கும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இப்பணி தொடரவும், ஜனங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி ஜீவிக்கவும், இம்மொழியில் வெளியிடப்பட்ட புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள் புத்தகங்களை பிற கிராமங்களுக்கு தடை ஏதும் வராமல் கொண்டு சென்று, விநியோகம் செய்யவும், இப்பணிக்கு IBT அலுவலர்கள் உதவிபுரியவும், புத்தகங்களை வாங்கிய மக்கள் அனுதினமும் வாசித்து, தியானித்து கர்த்தருக்குள் வளரவும் ஜெபியுங்கள். இந்த இருளா மக்களின் இரட்சிப்புக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*முன்னேற்றப் பணியாளர் :*
*சகோ. S. ராஜன்*
*பணித்தளம் : ஈரோடு (தமிழ்நாடு)*

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

ஆண்டவரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் கடந்த மாதம் என் ஊழியப் பணியை கிருபையாய் நடக்கச் செய்து, ஆசீர்வதித்தார். ஈரோடு பகுதியிலுள்ள கிராமங்கள் மற்றும் டவுன் பகுதிகளிலும் ஊழியம் செய்ய கர்த்தர் கிருபை செய்தார். முன்னேற்றப் பணிக்காக, சூரம்பட்டி நால் ரோடு, சூரம்பட்டி ஆசிரியர் காலனி, New Teachers Colony, குமலன் குட்டை, செல்வநகர், நசியனூர், பொன்னான்டான் வலசு, எல்லீஸ் பேட்டை, கவுந்தப்பாடி, பாலப்பாளையம், கோபி, பெருந்துறை டவுன், பெருந்துறை ஆனந்த நகர், பெருந்துறை கூட்டுறவு நகர், சிலேட்டர்புரம், சமாதானபுரம், பட்டக்காரன்பாளையம், சித்தோடு, முத்தம்பாளையம், கே.கே. நகர், ரங்கம்பாளையம், லோலார் வசந்த நகர், லக்காபுரம், கைகாட்டி வலசு, சம்பத் நகர், தென்னம்பாளையம், கன்னடையாம்பாளையம், பாரதி நகர், மணல்மேடு, எழுமாத்தூர் மண்காடு, பொன்னம்பாளையம், வேலாம்பாளையம், பெரிய நகர், N.G.G.O. காலனி, உழவன் நகர், இன்னும் பல பகுதிகளுக்கு சென்று ஊழியம் செய்ய கிருபை கொடுத்தார். பல கிராமங்களுக்குச் சென்று ஜெபித்தபோது, கர்த்தர் அநேகருக்கு அற்புதம் செய்தார். என் குடும்பத்திற்காகவும், என் ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மிஷனெரி : சகோ. சகாய சுவீடன்*
*பணித்தளம் : பாப்பன்பள்ளி*
*(சிறுவர் இல்லம், ஒடிஷா)*

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த மாதம் முழுவதுமாக நமது சிறுவர் இல்லத்தில் நடைபெற்ற எல்லா ஊழியங்களிலும் கர்த்தருடைய கிருபை காணப்பட்டது. MUT ஊழியம் மூலமாக வேலூர் CMC-இல் நடைபெற்ற CLHTC 5 நாள் பயிற்சியில் என் மனைவி சுபீதா பங்கேற்பதற்காக, IBT அலுவலகத்திலிருந்து வந்த அனுமதியின்படி, என் மனைவியுடன் வேலூர் வரை சென்று, மீண்டும் கோவை அலுவலகம் சென்று, சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கான விளையாட்டுப் பொருள்களை வாங்கி வேலூரில் சென்று, எனது மனைவியை

அழைத்து பாப்பன்பள்ளி சிறுவர் இல்லத்தில் கடந்துவர தேவன் கிருபை செய்தார்.

நமது சிறுவர் இல்லத்தில் சில பிள்ளைகள் தோல் அலர்ஜி, காய்ச்சல் போன்ற பெலவீனங்களால் மிகவும் கஷ்டப்பட்டனர். சுடு தண்ணீரில் டெட்டால் கலந்து சுத்தம் செய்து, மருத்துவமனை அழைத்துச் சென்று மருந்து வாங்கி பராமரித்தோம்.

நமது வளாகத்தில் மழையினால் அதிக புல் வளர்ந்து காணப்பட்டது. மாணவர்களுடன் தினமும் புல் வெட்டித் தோட்டம்அமைத்து வளாகத்தை சுத்தம் செய்து வருகிறோம்.

தினமும் காலை, மாலை வேளையில் ஜெபம் செய்து, பிள்ளைகளை படிக்க வைத்து, பராமரித்து வருகிறோம். பிள்ளைகளின் சரீர சுகத்திற்காகவும், வார்டன் குடும்பத்திற்காகவும் சமையல் செய்கிற பிள்ளைகளுக்காகவும் ஜெபியுங்கள்.

----------•----------

*<u>மொழிபெயர்ப்பாளர் :</u>*
*<u>சகோ. பிரகாஸ் பகோரா</u>*
*<u>மொழி : வாக்ரி</u>*
*<u>பணித்தளம் : அகோரியா (ராஜஸ்தான்)</u>*

கர்த்தருக்கே துதி உண்டாவதாக!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் சிறுவர் வேதாகமம் புத்தகத்திற்காக வாக்ரி மொழியில், 56 கதைகளை கணினியில் கீ-இன் செய்தேன்.

மிஷனெரிப் பணிக்காக வாக்ரி மொழிபேசும் மக்கள் வசிக்கும் கிராமங்களான பட்டேலியா, நயோமா, சட்ரி, பித்தர்மா, மற்றும் பாடிகாமில் ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியைப் பகிர்ந்து கொண்டேன். இதில் அஷிஸ், சாந்திலால், மஞ்சி, பாபு, சிலோஸ் காட்டில், முன்னு சாந்திலால் ஆகியோர் மிக வாஞ்சையுடனும், மகிழ்ச்சியுடனும் தேவ செய்தியைக் கேட்டார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் என் பணித்தளத்தில் ஞாயிறு ஆராதனை நடத்துகிறேன். 35 விசுவாசிகள் தொடர்ந்து சபைக்கு வருகிறார்கள். வீட்டு ஜெபக்கூட்டமும் நடைபெற்று வருகிறது.

என் மொழிபெயர்ப்புப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*<u>மிஷனெரி : சகோ. லெமன் சின்சானி</u>*
*<u>பணித்தளம் : கோண்டாபுரி (ஒடிஷா)</u>*

தேவனுக்கு துதி உண்டாவதாக!

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும், சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்று இயேசு கூறினார். கடந்த ஆகஸ்ட் மாதம் 21-ஆம் தேதியன்று நான் 7 புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க கர்த்தர் அருள் புரிந்தார். அவர்கள் கர்த்தருக்குள் வளர ஜெபியுங்கள். பற்பலவிதமான தடைகள், எதிர்ப்புகள், மிஷனெரிப் பணியில் வருகிறது. ஆனாலும், கர்த்தர் எல்லாவற்றிலிருந்தும் விடுவித்து காத்து வருகிறார்.

நற்செய்திப் பணிக்காக என்னுடன் இஸ்ரேல் எட்லா, ரூபன் அந்தாரு, ராமச்சந்திரா நாக் ஆகியோர் குழுவாக பாலுகுடா, நுவகுடா, குடிகுடா, கௌடகுடா ஆகிய கிராமங்களுக்குச் சென்றோம், ஒரு கிராமத்திலுள்ள சகோ. ஜோகோட், மெகடசியா என்ற பூஜாரி எதிர்ப்பு தெரிவித்தார். அதன்பின் அவருக்கு இயேசு கிறிஸ்துவின் மூலமாகக் கிடைக்கும் இரட்சிப்புக் குறித்து விளக்கமாகக் கூறினோம். இதேவேளையில் பலர் மிக வாஞ்சையுடன் நற்செய்தியைக் கேட்டார்கள். அவருக்கு ஒடியா மொழியிலுள்ள 4 தலைப்புகளிலுள்ள கைப்பிரதிகளை விநியோகித்து வந்தோம்.

இது தவிர ஞாயிறு ஆராதனை, சிறுவர் வேத பாடசாலை, சனிக்கிழமை உபவாச ஜெபக்கூடுகை, வீட்டு ஜெபக்கூட்டம் ஆகியவை நடத்தப்பட்டன. கோண்டாபுரியிலுள்ள மிர்கான் மொழிபேசும் மற்ற மக்களுக்காகவும், என் மிஷனெரிப் பணியில் வரும் தடைகள் மாறவும், அநேகரை இரட்சிப்பின் பாதையில் நடத்தவும், என் குடும்பத்தினர் அனைவருக்காகவும், என் சபை மக்களுக்காகவும் ஜெபியுங்கள்.

# IBT ஊழியத்தின் மூலமாக இதுவரை வெளியிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் ஒலிப்பதிவு கருவிகள் (Audio Devices)

<u>*தமிழ்நாடு :*</u>

***சௌராஷ்ட்ரா*** *மொழியில் பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள், 4 நற்செய்திப் புத்தகங்கள், சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம்.*

***படுகா*** *மொழியில் பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள் மற்றும் 4 நற்செய்திப் புத்தகங்கள்.*

***தோடா*** *மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள் மற்றும் மாற்கு நற்செய்தி நூல்.*

***பனியா*** *மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள், மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய 3 நற்செய்திப் புத்தகங்கள்.*

***கோத்தா*** *மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.*

***இருளா (குஞ்சப்பனை)*** *மொழியில் புதிய ஏற்பாடு மற்றும் மத்தேயு, மாற்கு, லூக்கா நற்செய்தி நூல்கள்.*

***இருளா (வெள்ளியங்காடு)*** *மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள் மற்றும் மாற்கு, லூக்கா நற்செய்தி நூல்கள்.*

<u>*கர்நாடகா :*</u>

***எரவா*** *மொழியில் மாற்கு மற்றும் லூக்கா நற்செய்தி நூல்கள்.*

***கொடவாதக்*** *மொழியில் மாற்கு மற்றும் யோவான் நற்செய்திப் புத்தகங்கள்.*

***வாக்ரி*** *மொழியில் மத்தேயு மற்றும் மாற்கு நற்செய்திப் புத்தகங்கள்.*

***லம்பானி*** *மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.*

***சித்திக்*** *மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.*

***போவி*** *மொழியில் புதிய ஏற்பாடு மத்தேயு & மாற்கு நற்செய்தி நூல்கள்.*

***ஜெனுகுரும்பா*** *மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.*

<u>*ராஜஸ்தான் :*</u>

***ஹடோத்தி*** *மொழியில் மத்தேயு நற்செய்தி நூல்.*

***மார்வாடி*** *மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.*

***துந்தானி*** *மொழியில் மத்தேயு நற்செய்தி நூல்.*

***வாக்ரி*** *மொழியில் 4 நற்செய்திப் புத்தகங்கள்.*

***டிங்கால்*** *மொழியில் மத்தேயு & மாற்கு நற்செய்தி நூல்கள்.*

***மேவாரி*** *மொழியில் மத்தேயு நற்செய்தி நூல்.*

__உத்திரப் பிரதேசம் :__

***போஜ்புரி*** மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள், மாற்கு, யோவான் நற்செய்தி நூல்கள், சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம்.

__சட்டிஷ்கார் :__

***சட்டிஷ்காரி*** மொழியில் புதிய ஏற்பாடு மற்றும் மாற்கு, யோவான் நற்செய்தி நூல்கள்.

***குடுக்*** மொழியில் மத்தேயு, யோவான் நற்செய்தி நூல்கள்.

***ஹல்பி*** மொழியில் மத்தேயு, யோவான் நற்செய்தி நூல்கள்.

---

__ஓடிஷா :__

***தெஷியா*** மொழியில் புதிய ஏற்பாடு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்தி நூல்கள் மற்றும் சிறுவர் வேதாகமம்.

***மிர்கான்*** மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழிகள், மத்தேயு, மாற்கு, லூக்கா நற்செய்தி நூல்கள் மற்றும் சிறுவர் வேதாகமம்.

***போடோ பொர்ஜா*** மொழியில் புதிய ஏற்பாடு மற்றும் லூக்கா நற்செய்தி நூல்.

***கலகாண்டியா*** மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள், மாற்கு நற்செய்தி நூல் மற்றும் சிறுவர் வேதாகமம்.

***சம்பல்புரி*** மொழியில் புதிய ஏற்பாடு, மாற்கு, யோவான் நற்செய்தி நூல்கள் மற்றும் சிறுவர் வேதாகமம்.

***முண்டாரி*** மொழியில் புதிய ஏற்பாடு மற்றும் மாற்கு, யோவான் நற்செய்தி நூல்கள்.

***கடபா*** மொழியில் மாற்கு நற்செய்தி நூல். சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம்.

***கோயா*** மொழியில் மத்தேயு நற்செய்தி நூல்.

***கோண்டா பொர்ஜா*** மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.

***குவி*** மொழியில் லூக்கா நற்செய்தி நூல், சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம்.

***சோரா*** மொழியில் மத்தேயு, மாற்கு நற்செய்தி நூல்கள், சிறுவர் வேதாகமம் மற்றும் பாடல் புத்தகம்.

---

__மத்தியப் பிரதேசம் :__

***பாகேலி*** மொழியில் மத்தேயு, மாற்கு, யோவான் நற்செய்தி நூல்கள்.

***பண்டேலி*** மொழியில் மாற்கு நற்செய்தி நூல்.

# ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவிகள் (Audio Devices)

<u>தமிழ்நாடு :</u>

1. ***தோடா*** மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவி *(Audio Device).*

2. ***இருளா (வெள்ளியங்காடு)*** மொழியில் புதிய ஏற்பாடு ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவி *(Audio Device).*

<u>ஒடிஷா :</u>

1. ***தெஷியா*** மொழியில் புதிய ஏற்பாடு ஒலிப்பதிவு செய்யப்பட்ட கருவி *(Audio Device).*

# உலகச் செய்திகள்

★ இலங்கை அதிபர் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி முன்னணி வேட்பாளர் அனுர குமார திசாநாயக (56) வெற்றி பெற்றார். அந்நாட்டில் 9-வது அதிபராக அவர் செப்டம்பர் 23-ஆம் தேதியன்று பதவியேற்றார்.

★ ECI கிறிஸ்தவ திருச்சபையின் பேராயர் எஸ்றா சற்குணம் (86) உடல்நிலைக் குறைவால் சென்னையில் காலமானார். இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவரும், இந்திய சுவிசேஷ திருச்சபையின் (ECI) தலைமைப் பேராயருமான எஸ்றா சற்குணம் அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 22.9.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார்.

★ 297 தொன்மையான கலைப் பொருட்களை இந்தியாவிடம் ஒப்படைத்தது அமெரிக்கா.

★ ஹங்கேரியில் நடைபெற்ற 45-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் இந்திய ஆடவர், மகளிர் அணிகள் ஞாயிற்றுக்கிழமை தங்கம் வென்று அசத்தின. போட்டி வரலாற்றில் இந்திய அணிகள் தங்கம் வென்றது இதுவே முதல் முறையாகும்.

★ செப்டம்பர் மாதம் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் நடைபெற்று வந்து 17-வது கோடைகால பாராலிம்பிக் போட்டியில், இந்தியர்கள் 7 தங்கம், 9 வெள்ளி, 13 வெண்கலம் என 29 பதக்கங்கள் வென்று அசத்தியுள்ளனர். பட்டியலில் இந்தியாவுக்கு 18-ஆவது இடம் கிடைத்துள்ளது.

# தேவை

*IBT மொழிபெயர்ப்பாளர்களுக்கு கொடுப்பதற்கு 1 Laptop தேவைப்படுகிறது. இதற்கான தொகை ரூ. 45,000 ஆகும். இதற்கு Sponser கிடைப்பதற்காக ஜெபியுங்கள்.*

*- IBT பொருளாளர்*

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators

UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |
| 16. | இதய கீதங்கள் (பாடல் புத்தகம்) | ரூ. 60/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. கடந்த செப்டம்பர் மாதத்தில் முதன்முறையாக அவினாசியிலுள்ள CSI இம்மானுவேல் ஆலயத்தில் IBT ஊழிய அறிமுகம் செய்வதற்கும், தேவ செய்தி கொடுப்பதற்கும் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். IBT வெளியிட்டுள்ள இலக்கியப் புத்தகங்களையும், சபை மக்கள் ஆவலுடன் வாங்கியுள்ளார்கள். வாங்கியவர்கள் படித்துப் பயன்பெற ஜெபியுங்கள்.

2. போஜ்புரி மொழியிலுள்ள பழைய ஏற்பாடு பகுதியில் 33 புத்தகங்கள் கணினியில் Para Text-ற்கு மாற்றப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். மீதமுள்ள 3 புத்தகங்களும் முடிக்கப்பட்டு, இதன் சரிபார்ப்புப் பணி ஆரம்பிக்கப்பட ஜெபியுங்கள்.

3. லம்பானி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு இறுதி சரிபார்ப்புப் பணியை மொழிபெயர்ப்பாளர்கள் முடித்து அனுப்பியதற்காக கர்த்தரைத் துதியுங்கள். இதன்பின், Page Setting பணிக்காக பெங்களூரு அனுப்பப்பட உள்ளது. இப்பணி துரிதமாய் முடிக்கப்பட்டு, மீண்டும் மொழிபெயர்ப்பாளர்களுக்கு அனுப்பப்பட ஜெபியுங்கள்.

4. பண்டேலி மொழியிலுள்ள புதிய ஏற்பாடு சரிபார்ப்பை இம்மாதத்தில் கோவை IBT மையத்தில் செய்வதற்கு BSI, Rev. சுப்ரமணி அவர்கள் திட்டமிட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதியுங்கள். திட்டமிட்டபடி, தாமதமின்றி ஆரம்பிக்கப்படவும், இதேபோல் வேறு சில மொழிகளில் சரிபார்ப்புப் பணியை மேற்கொள்வதற்கு BSI சம்மதம் தெரிவிக்க ஜெபியுங்கள்.

5. IBT ஊழியத்தின் தேவையை பத்திரிகை வாயிலாக அறிந்து 2 லேப்டாப்களுக்கு Sponser செய்த ஒரு சகோதரர் குடும்பத்தை கர்த்தர் அபரிமிதமாக ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.


Send all your Contributions :
**Cheques / DD / M.O. to**
**INDIAN BIBLE TRANSLATORS**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
**Web : www.ibtword.com**


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/–

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of — **Mr. K. JAISINGH**, **WORD PUBLISHERS TRUST**, 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Printed by — **Mr. C.K. VENKATESH**, Chandra Prabha Press, 113-118, V.H. Road, CBE-1.


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவை புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/–ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். வங்கியில் அனுப்பினால் IBT அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தவும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS
**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBIN0282057 |

Address :
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**
Date of Publishing : 2nd & 3rd November 2024
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**
**RNI No. 82166**